# பாடிடுவேன் உன்தன்



பாடிடுவேன் உன்தன் குழலிசையுடன் இசைந்தே,

ஆடிடுவேன் உன்தன் கழலிசையுடன் இணைந்தே !

பாடிடுவேன்......

குயிலென நீயும் இசைபாடிட,

மயிலென நானும் நடமாடிட;

கயலென கண்கள் சுழன்றிட,

துயின்றுடுவேன் உன் மடிமீதினிலே !

பாடிடுவேன்.......

மதியென உன்முகம் துலங்கிட,

அதிலென் உள்மனம் மயங்கிட;

மதியிழந்துன் மேல் சாய்ந்திட,

கதியின்றி துயில்வேன் மடிமீதினிலே !

பாடிடுவேன்........